**திருவேற்காடு நகராட்சி**
**சாதாரணக் கூட்டம்**

**திருவேற்காடு நகராட்சியில் 2024–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான நகல்.**

## கூட்டப்பொருள்

### பொருள் எண்.1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஜீலை 2024 மற்றும் ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

---

**தீர்மான எண். 678**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

### பொருள் எண்.2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களின் ஜீலை 2024 மற்றும் ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

---

**தீர்மான எண். 679**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

### பொருள் எண்.3

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களின் ஜீலை 2024 மற்றும் ஆகஸ்ட் 2024 மாதம் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

---

**தீர்மான எண். 680**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

### பொருள் எண்.4

திருவேற்காடு நகராட்சி வார்டு எண். 8 பொன்னியம்மன் நகர் பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) 2 எண்ணிக்கை கட்டப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் கட்டப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றது. இதில் பயன்படுத்தப்பட்டு வரும் கன்வேயர் (Conveyor), கட்டர் இயந்திரம் (Shredding Machine), எடை அளவு இயந்திரம் (Weight Machine) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் உள்ள தினசரி சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகளை உரமாக்க முடியாமல் பொது சுகாதாரம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

1) கட்டர் இயந்திரம் (Shredding Machine),
2) கன்வேயர் (Conveyor)
3) மின்விளக்குகள் மற்றும் ஒயரிங் சரிபார்த்தல்
4) முன்பகுதி கேட் (Gate) பழுது பார்த்தல்.
5) புதியதாக எடை அளவு இயந்திரம் (Weight Machine) சப்ளை செய்தல்.
6) கழிவறை பழுது பார்த்தல்.

எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த பொருட்களை பராமரிப்பு செய்திடவும் தேவைப்படின் புதியதாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**தீர்மான எண். 681**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி வார்டு எண். 13 வீரராகவபுரம் பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) 2 எண்ணிக்கை கட்டப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் கட்டப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றது. இதில் பயன்படுத்தப்பட்டு வரும் கன்வேயர் (Conveyor), கட்டர் இயந்திரம் (Shredding Machine), எடை அளவு இயந்திரம் (Weight Machine) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் உள்ள தினசரி சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகளை உரமாக்க முடியாமல் பொது சுகாதாரம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

1) கட்டர் இயந்திரம் (Shredding Machine),
2) கன்வேயர் (Conveyor)
3) மின்விளக்குகள் மற்றும் ஒயரிங் சரிபார்த்தல்
4) முன்பகுதி கேட் (Gate) பழுது பார்த்தல்.
5) புதியதாக எடை அளவு இயந்திரம் (Weight Machine) சப்ளை செய்தல்.

எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த பொருட்களை பராமரிப்பு செய்திடவும் தேவைப்படின் புதியதாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**தீர்மான எண்.682**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி வார்டு எண். 8 இராஜாங்குப்பம் பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) கட்டப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் கட்டப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றது. இதில்

பயன்படுத்தப்பட்டு வரும் கன்வேயர் (Conveyor), கட்டர் இயந்திரம் (Shredding Machine), எடை அளவு இயந்திரம் (Weight Machine) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் உள்ள தினசரி சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகளை உரமாக்க முடியாமல் பொது சுகாதாரம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

1) கட்டர் இயந்திரம் (Shredding Machine),
2) கன்வேயர் (Conveyor)
3) மின்விளக்குகள் மற்றும் ஒயரிங் சரிபார்த்தல்
4) முன்பகுதி கேட் (Gate) பழுது பார்த்தல்.
5) புதியதாக எடை அளவு இயந்திரம் (Weight Machine) சப்ளை செய்தல்.
6) மேற்கூரை பழுது பார்த்தல்.

எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த பொருட்களை பராமரிப்பு செய்திடவும் தேவைப்படின் புதியதாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

தீர்மான எண்.**683**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி வார்டு எண். 4 கோலடி பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) கட்டப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் கட்டப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றது. இதில் பயன்படுத்தப்பட்டு வரும் கன்வேயர் (Conveyor), கட்டர் இயந்திரம் (Shredding Machine), எடை அளவு இயந்திரம் (Weight Machine) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் உள்ள தினசரி சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகளை உரமாக்க முடியாமல் பொது சுகாதாரம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

1) கட்டர் இயந்திரம் (Shredding Machine) 5 எச்.பி மின்மோட்டார் புதியதாக பொருத்துதல், கன்வேயர் (Conveyor) 3 எச்.பி மின்மோட்டார் புதியதாக பொருத்துதல் மற்றும் மின்விளக்குகள் மற்றும் ஒயரிங் சரிபார்த்து பராமரித்தல் பணி.
2) முன்பகுதி கேட் (Gate) பழுது பார்த்தல்.
3) புதியதாக எடை அளவு இயந்திரம் (Weight Machine) சப்ளை செய்தல்.
4) முன்பகுதி அனுகு சாலை பழுது பார்த்தல்.

எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த பொருட்களை பராமரிப்பு செய்திடவும் தேவைப்படின் புதியதாக வாங்கி

கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

தீர்மான எண்.684

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.17 புளியம்பேடு பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) கட்டப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் கட்டப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றது. இதில் பயன்படுத்தப்பட்டு வரும் கன்வேயர் (Conveyor), கட்டர் இயந்திரம் (Shredding Machine), எடை அளவு இயந்திரம் (Weight Machine) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் உள்ள தினசரி சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகளை உரமாக்க முடியாமல் பொது சுகாதாரம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

1) கட்டர் இயந்திரம் (Shredding Machine),
2) கன்வேயர் (Conveyor)
3) மின்விளக்குகள் மற்றும் ஒயரிங் சரிபார்த்தல்
4) முன்பகுதி கேட் (Gate) பழுது பார்த்தல்.
5) புதியதாக எடை அளவு இயந்திரம் (Weight Machine) சப்ளை செய்தல்.

எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த பொருட்களை பராமரிப்பு செய்திடவும் தேவைப்படின் புதியதாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

தீர்மான எண்.685

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 13 | பாரதி நகர் 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 9.90 |

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2. | 17 | பாலாஜி நகர் மற்றும் பிள்ளையார் கோயில் தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 9.90 |
| 3. | 15 | சாய்அவென்யூ பகுதிக்கு தார்தளம் அமைத்தல். | 9.90 |
| 4. | 2 | அன்பு நகர் பவானியம்மன் கோயில் அருகில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 10.00 |
| 5. | 4 | கிருஷ்ணா நகர் 3வது தெரு மற்றும் 4வது தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 9.90 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் பணிகள் மற்றும் சாலை பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.686

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் உள்ள காவேரி நகர் பூங்கா மேம்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த மிக்ஜாம் புயல், வடகிழக்கு பருவமழை மற்றும் டிசம்பர் மாதம் பெய்த அதீத கனமழை காரணமாக பூங்காக்களில் 2 முதல் 5 அடி வரை மழைநீர் மற்றும் சகதிகள் தேங்கி மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன், விளையாட்டு சாதனங்களும் பழுது அமைந்துள்ளது. எனவே, இப்பூங்காக்களை சீரமைத்து பொதுமக்கள் பயன்படுத்த படிந்துள்ள சகதிகளை நீக்கி, சுத்தம் செய்து மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கோரி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைக்கின்றனர். எனவே, சீரமைப்பு பணி செய்ய ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பூங்காவினை சீரமைக்கவும் மற்றும் பழுதுபட்ட விளையாட்டு தளவாட பொருட்களை சீர் செய்ய பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 15 | காவேரி நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.90 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.687

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் உள்ள ஜட்ஜஸ் காலனி பூங்கா மேம்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த மிக்ஜாம் புயல், வடகிழக்கு பருவமழை மற்றும் டிசம்பர் மாதம் பெய்த அதீத கனமழை காரணமாக பூங்காக்களில் 2 முதல் 5 அடி வரை மழைநீர் மற்றும் சகதிகள் தேங்கி மக்கள்

பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன், விளையாட்டு சாதனங்களும் பழுது அமைந்துள்ளது. எனவே, இப்பூங்காக்களை சீரமைத்து பொதுமக்கள் பயன்படுத்த படிந்துள்ள சகதிகளை நீக்கி, சுத்தம் செய்து மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கோரி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைக்கின்றனர். எனவே, சீரமைப்பு பணி செய்ய ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பூங்காவினை சீரமைக்கவும் மற்றும் பழுதுபட்ட விளையாட்டு தளவாட பொருட்களை சீர் செய்ய பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 18 | ஜட்ஜஸ் காலனி பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.80 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.688**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் உள்ள லட்சுமி நகர் பூங்கா மேம்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த மிக்ஜாம் புயல், வடகிழக்கு பருவமழை மற்றும் டிசம்பர் மாதம் பெய்த அதீத கனமழை காரணமாக பூங்காக்களில் 2 முதல் 5 அடி வரை மழைநீர் மற்றும் சகதிகள் தேங்கி மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன், விளையாட்டு சாதனங்களும் பழுது அமைந்துள்ளது. எனவே, இப்பூங்காக்களை சீரமைத்து பொதுமக்கள் பயன்படுத்த படிந்துள்ள சகதிகளை நீக்கி, சுத்தம் செய்து மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கோரி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைக்கின்றனர். எனவே, சீரமைப்பு பணி செய்ய ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பூங்காவினை சீரமைக்கவும் மற்றும் பழுதுபட்ட விளையாட்டு தளவாட பொருட்களை சீர் செய்ய பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 4 | லட்சுமி நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.90 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.689**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள

தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 5 | மேல்அயனம்பாக்கம் பெருமாள் கோயில் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.00 |
| 2. | 7 | பொன்னியம்மன் நகர் அம்பேத்கார் குறுக்கு தெருவிற்கு பேவர் சாலை அமைத்தல். | 10.00 |
| 3. | 8 | மெட்ரோ சிட்டி 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு, 3வது தெரு மற்றும் 4வது தெருக்களுக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 9.70 |
| 4. | 10 | தேவி நகர் 6வது தெரு மற்றும் ராஜரத்தினம் நகர் 2வது மற்றும் 3வது தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.00 |
| 5. | 12 | செல்வ கணபதி நகர் பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.00. |
| 6. | 14 | காமதேனு நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல் | 9.90 |
| 7. | 16 | ராஜீவ் நகர் 1வது குறுக்கு தெரு மற்றும் 2வது குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல் | 12.50 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலை பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.690

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது நிதி குழு மான்ய திட்டத்தின் கீழ் புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளுக்கு புதியதாக மின் இணைப்பு பெற பதிவு கட்டணம் மற்றும் முன்வைப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது. மின்சார வாரியம் தெருவிளக்குகள் தொடர்பான கம்பி வழித்தடம் பணிகள் விரைவில் மேற்கொள்ள உள்ளது என அறியப்படுகிறது. இந்நிலையில் கம்பி வழித்தடங்களுக்கான Meter Box, Fuse Unit இதர உபகரணங்கள் அமைத்திட தேவையான Meter Box கொள்முதல் செய்திடுதல் அவசியமாகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.691

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பிள்ளையார் மடம் தாங்கல் பிரதான சாலை (திருவேற்காடு சாலை) மற்றும் நூம்பல் ஏரிக்கரை தெரு பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் பாதாள சாக்கடை பிரதான குழாய்களை சுமார் 0.880 கி.மீ நீளத்திற்கு அமைத்துக்கொள்ள உரிய அனுமதி வழங்கிட கோரி திட்டப் பொறியாளர் I (P) III, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகர் நிர்வாக வளாகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி நகர், இராஜாஅண்ணாமலைபுரம், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.CMWSSB/ CE(P)II/S,E(P)III ADBProject/ KBM UGSS நாள்.05.03.2021–ன்படி கடிதம் நகராட்சிக்கு பெறப்பட்டதையடுத்து, மேற்படி நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் வழியே பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் போது ஏற்படும் சாலை பழுதுகளை சீர் செய்ய சீரமைப்புக் கட்டணமாக ரூ.66,00,000/–ஐ இந்நகராட்சிக்கு செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, அறிவுறுத்தியதை தொடர்ந்து, மேற்கண்ட துறையினரால் சாலை சீரமைப்பு கட்டணம் இந்நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட துறையின் மூலம் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளதால், அச்சாலையினை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.66.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்படி நிறுவனத்தார் குழாய் பதிக்கும் பணியினை முழுமையாக முடிக்கப்பட்டதாலும், அத்துறையின் மூலம் செலுத்தப்பட்ட சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதால், அச்சாலையினை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

தீர்மான எண்.692

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.16

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2024–25 ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 19.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | பாலகிருஷ்ணா நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 6.30 | 1.G.Vijayakumar<br>2.J. Venkatesan | 0.38% மதிப்பீட்டை விட குறைவு<br>4.74% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 8 | மெட்ரோ சிட்டி பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 6.50 | 1.G. Vijayakumar<br>2.J. Venkatesan | 0.42% மதிப்பீட்டை விட குறைவு<br>4.95% மதிப்பீட்டை விட அதிகம் |

| வ.எண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 3. | 16 | மகாலட்சுமி நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 6.20 | 1.J. Venkatesan<br>2.K.S. Janarthanam | 0.42% மதிப்பீட்டை விட குறைவு<br>4.93 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 2 | TTS நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.80 | 1.S.G. Narayanan<br>2.G. Vijayakumar | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>4.92 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | 6 | கீசன் நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 4.20 | 1.M/s. EBF & Co<br>2.J. Venkatesan | 0.60 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.76 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 7 | ஐஸ்வர்யா நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 4.10 | 1.G. Vijayakumar<br>2.J. Venkatesan | 0.60 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.86 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 13 | கீரின் பார்க் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 4.00 | 1.G. Vijayakumar<br>2.J. Venkatesan | 0.44 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.80 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | 18 | ஐ.சி.எல் காலனி பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.90 | 1.J. Venkatesan<br>2.G. Vijayakumar | 0.56 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | 5 | நியூ சென்னை சிட்டி பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 2.90 | 1.M/s. Vanaja Construction<br>2.J. Venkatesan | 0.32 % மதிப்பீட்டை விட குறைவு<br>8.13 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 10. | 9 | பல்லவன் நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.10 | 1.J. Venkatesan<br>2.K.S. Janarthanam | 0.07 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.48 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | 11 | மகாலட்சுமி நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.00 | 1.S.G. Narayanan<br>2.G. Vijayakumar | 0.13 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.75 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ.எண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 12. | 12 | சூரிய நாராயணன் நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 2.80 | 1.S.G. Narayanan<br>2.G. Vijayakumar | 0.40 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.56 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 13. | 16 | கேந்திர விஹார் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.20 | 1.J. Venkatesan<br>2.K.S. Janarthanam | 0.61 % மதிப்பீட்டை விட குறைவு<br>7.74 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 14. | 17 | மூகாம்பிகை நகர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.00 | 1.Vanaja Construction<br>2.J. Venkatesan | 0.77 % மதிப்பீட்டை விட குறைவு<br>8.43 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**தீர்மான எண்.693**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.17

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31917/2019/TP2, நாள்.25.07.2024 கடிதத்தில் கட்டட வரைபட அனுமதி சுயசான்று **(Self–Certification)** முறையில் குடியிருப்புகளுக்கு கட்டட வரைபட அனுமதி வழங்க ஒற்றைச்சாளர இணைய முகப்பில் **(Single Window Portal)** மென்பொருள் தொகுதியை உருவாக்கியும் மற்றும் அதனை செயல்படுத்தியும் உள்ளது. அதன்படி அதற்கான ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்து அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.18.07.2024–ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், இணைப்பு I, II மற்றும் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம்) சுய சான்றின் **(Self–Certification)** அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் **(Single Window Portal)** இணைய வழி கட்டட அனுமதி **(Online Building Approval)** பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களைக் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | |
|---|---|---|---|
| 325 ச.மீ வரை (3500 ச,அடி வரை) | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ.எண் | நகராட்சியின் நிலை | ரூ. ச.மீ | ரூ.ச.அடி |
| 1. | சிறப்புநிலை நகராட்சி | 800 | 74 |

| DETAILS OF MUNICIPALITIES | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| I.Special Grade Municipalitiy | | Consolidated Fee | | | | |
| Sl.No | Name of the Municipality | Rs.Per Sq.mt | | | | Rs.Per sq.ft |
| | | Building License Fee | D.C | LWF | Total | |
| 1. | Thiruverkadu | 563 | 16 | 221 | 800 | 74 |

மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் சுய சான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அரசாணை (நிலை) எண்.133, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(1)] துறை, நாள்.18.07.2024–ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதகள் 2019–ன் விதி எண்.2,6 மற்றும் தொடர்புடைய ,இணைப்புகள் ஆகியற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணையின் படி,

1. விதி எண்–2 துணை விதி

   "105–A" –ல் "சுய சான்றளிப்பு" என்பது சுய சான்றளிப்பு அல்லது சுய சான்றளிக்கப்பட்ட கட்டிடங்களின் கட்டுமானம் அல்லது புனரமைப்புக்கான கட்டிடத் திட்டம் மற்றும் தளத்திட்டம் ஆகியவை நடைமுறையில் உள்ள சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, விண்ணப்பதாரால் வழங்கப்பட்ட சுய சான்றளிப்பு அல்லது அறிவிப்பு ஆகும் என வரையறுக்கப்பட்டுள்ளது:

   "105–B" –ல் "சுய சான்று அடிப்படையிலான கட்டடங்கள்" என்பதற்கு 2500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையில் 3500 சதுர அடி பரப்பளவு கொண்ட 2 குடியிருப்புகளுக்கு (2 Dwelling Units) மிகாமல், தரைத்தளம் அல்லது தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்கு உட்பட்ட கட்டுமானம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

2. விதி எண்.6–ல் துணை விதி 1–A–க்கு பிறகு பின்வரும் துணை விதி உட்புகுத்தப்பட்டுள்ளது. அதாவது:–

   (1–A) விதி 35–ன் உள்ளடக்கம் யாதாகினும், சுய சான்றளிக்கப்பட்ட கட்டடத்திற்கான திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெறுவதற்கான நோக்கத்திற்காக, விண்ணப்பதாரர் நிலத்தின் உரிமையாளராக அல்லது குத்தகைதாரர் அல்லது உரிமையாளரின் அதிகாரம் பெற்றவர், அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலம், சுய சான்றளிப்பு தொகுதி மற்றும் ஆன்லைன் வழியாக இணைப்பு XXVI–க்கு உட்பட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

3. இணைப்பு XXV–க்குப் பிறகு இணைப்பு XXVI சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பில் விதி எண் 6(1–A)–ன் படி சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கான விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண்.134, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4)1)] துறை, நாள்.18.07.2024–ல் சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி பொருந்தாது என ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கலாம். மேற்கண்ட நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் சுயசான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் இவ்வரசாணையில் கட்டுப்படாத இதர கட்டுமானங்களுக்கு ஏற்கெனவே அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களால் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு குடியிருப்பு மற்றும் வணிக கட்டங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| I | **கட்டிட உரிமத் தொகை** | | |
| 1 | **உத்தேச கட்டிடத்தின் விவரம்** | **குடியிருப்பு கட்டண விவரம்** | **வணிக பயன்பாடு கட்டண விவரம்** |
| | **கட்டிடத்தின் மொத்த பரப்பளவு**<br>**i) குடியிருப்பு கட்டிடம்**<br>ரூ.800/– 1 ச.மீட்டருக்கு (அ) ரூ.74/– 1 ச.அடிக்கு<br>**ii) வணிக கட்டிடம்**<br>ரூ.850/– 1 ச.மீட்டருக்கு (அ) ரூ.79/– 1 ச.அடிக்கு | a) கட்டிட உரிமை கட்டணம் ரூ.563/– 1 (ச.மீட்டருக்கு)<br>b) வளர்ச்சி கட்டணம் D.C ரூ.16/–(1 ச.மீட்டருக்கு)<br>c) கட்டிட தொழிலாளர் நல சந்தா கட்டணம் (LWF) ரூ.221/– (1 ச.மீட்டருக்கு) | a) கட்டிட உரிமை கட்டணம் ரூ.601/– (1 ச.மீட்டருக்கு)<br>b) வளர்ச்சி கட்டணம் D.C ரூ.28/– (1 ச.மீட்டருக்கு)<br>c) கட்டிட தொழிலாளர் நல சந்தா கட்டணம் (LWF) ரூ.221/– (1 ச.மீட்டருக்கு) |
| 2 | கட்டிட பணிகள் துவங்கப்பட்டிருப்பின் அபராத கட்டணம் | கட்டிட உரிமை கட்டணத்தில் 50% | கட்டிட உரிமை கட்டணத்தில் 50% |
| 3 | பழைய கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த இடிமான கட்டணம் | 1 ச.மீட்டருக்கு ரூ.100/– | 1 ச.மீட்டருக்கு ரூ.100/– |
| II | மழைநீர் சேகரிப்பு தொட்டி முன்வைப்பு தொகை | 1 குடியிருப்புக்கு ரூ.2000/– | 1 கட்டிடத்திற்கு ரூ.10000/– |
| III | ஆய்வு கட்டணம் | ரூ.2000/– | ரூ.5000/– |
| IV | முறைப்படுத்துதல் கட்டணம் (R.C) | சதுர மீட்டருக்கு ரூ.50/– | சதுர மீட்டருக்கு ரூ.50/– |
| V | திறந்தவெளி கட்டணம் (O.S.R) | 10% of Guideline Value | 10% of Guideline Value |
| VI | உட்கட்டமைப்பு கட்டணம் (I & A Charges) | சதுர மீட்டருக்கு ரூ.375/– | சதுர மீட்டருக்கு ரூ.375/– |
| VII | Security Deposit | 50% of I & A Charges | 50% of I & A Charges |
| VIII | கொடி நாள் கட்டணம் | ரூ.1000/– (1 குடியிருப்புக்கு) | ரூ.5000/– |
| IX | அறிவிப்பு பலகை | ரூ.1500/– | ரூ.1500/– |

மேற்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி பெறலாம். மேற்கண்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சுயசான்று **(Self–Certification)**

முறையில் குடியிருப்பு கட்டடங்களுக்கு உரிம கட்டணங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியன நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள படி சுயசான்றின் அடிப்படையில் விண்ணப்பிக்க இயலாத பொருந்தாத அளவில், அளவிற்கு அதிகமாகவும் அதிக பரப்பளவுள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டடங்களுக்கு கட்டிட உரிமத் தொகை மேற்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.694**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் வர இருக்கும் வட கிழக்கு பருவமழை காரணமாக மழை காலத்தில் கொசு பெருக்கம் அதிகமாக இருப்பதால் முதிர் கொசுக்களை ஒழிக்க கொசு ஒழிப்பு சாதனம் அவசியம் தேவைப்படுகிறது. இந்நகராட்சியில் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு 2 சிறிய வகை இயந்திரம் (2 Pulse Fogging Machine) மற்றும் 2 வாகனத்தில் வைத்து புகை தெளிப்பு இயந்திரம் (Vehicle Mounted Machine) பயன்பட்டு வந்தது. இந்த இயந்திரம் அதிக அளவில் பயன்படுத்துவதால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே, பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உடன் சரி செய்து மருந்து தெளிக்கவும் விலைப்புள்ளி அடிப்படையில் வருடாந்திர பராமரிப்பு பணி செய்யவும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   ந.க.எண்.4809/2024/எச்1

---

**தீர்மான எண்.695** **தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.19

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு சொந்தமான கழிவுநீர் வாகனம் TN20CV4574 ஆனது முற்றிலும் பழுதடைந்துள்ளதால் பொது சுகாதார நலன் கருதி இவ்வாகனத்தின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு ஓட்டுநர் அளித்துள்ள விபரப்படி பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெற்று தர உள்ளூர் மற்றும் வெளியூர் ஒப்பந்ததாரர்களிடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.696** **தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.20

திருவேற்காடு நகராட்சிக்கு சொந்தமான கோலடி என்ற இடத்தில் செயல்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிப்பு மற்றும் பிரேதங்கள் தகனம்

செய்ய M/s: M.H.T.Engineering, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை என்ற நிறுவனம் அனுமதி வேண்டி மனு அளித்துள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 20543/2021/P1, நாள்: 26.07.2024—ல், அரசாணை (நிலை) எண்: 228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி3) நாள்: 13.11.2008—ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி புதியதாக அல்லது புனரமைக்கப்பட்ட எரிவாயு தகனமேடைகளை நகர்மன்ற தலைவர், ஆணையாளர், துப்புரவு அலுவலர் மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட மூலம் கட்டணத்தை நிர்ணயித்து தனியார்/தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, M/s: M.H.T. Engineering என்ற நிறுவனம், கோலடி நவீன எரிவாயு தகன மேடையை பராமரித்திட அனுமதி கோரியுள்ள மனுவின் அடிப்படையில், அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பிரேதம் ஒன்றுக்கு தகனம் செய்ய கட்டணமாக ரூ.4000/— நிர்ணயம் செய்து M.H.T.Engineering என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4743/2024/எச்1)

---

**தீர்மான எண்.697**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.21

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில், பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழை வெள்ள நீர் தெருக்கள், சாலைகளில் தேங்காமல் அப்புறப்படுத்தவும், சாலைகள் தெருக்களில் உள்ள முள், செடிகள் அகற்றி பொது சுகாதாரத்தை மேம்படுத்த ஜேசிபி வாகனம் வாடகை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 23.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனங்கள் | ஒரு மணி நேரத்துக்கு ரூபாய் |
|---|---|---|
| 1. | DBR Earth Movers,<br>71, Kuyavar Street,<br>Mannurpet ,<br>Chennai – 600 050 | ரூ.900.00 |
| 2. | J.S.Balaji Earth Movers,<br>No: 23, Pillaiyar Koil Street,<br>Vadanoombal,<br>Chennai – 600 077 | ரூ.850.00 |
| 3. | A.E.Selvadurai Earth Movers,<br>No: 28, Ponniamman Nagar, | ரூ.784.00 |

| | | |
|---|---|---|
| | Ponniamman Koil Street,<br>Kil Aynamabakkam,<br>Chennai – 95 | |

வரப்பெற்றுள்ள 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s: A.E.Selvadurai Earth Movers, No: 28, Ponniamman Nagar,Ponniamman Koil Street,Kil Aynamabakkam,Chennai – 95 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனம் M/s: M/s: A.E.Selvadurai Earth Movers –ன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

---

**தீர்மான எண்.698**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.22

திருவேற்காடு நகராட்சி சென்னை பெருநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள பெரு மாநகராட்சியாகும். இந்நகராட்சியில் 18 வார்டுகளும், இதில் 31,554 குடியிருப்புகளும், 1883 வணிக நிறுவனங்களும் உள்ளன. மேற்படி குடியிருப்புகளில் மற்றும் வணிக வளாகங்களில் தினசரி ஈரக்கழிவுகள் மற்றும் உலர்கழிவுகள் என பிரித்து பெறப்பட்டு, ஈரக்கழிவுகளை நுண்ணுயிர் உரமாக்கும் மையத்திலும் மற்றும் உலர்கழிவுகளை வளமீட்பு மையத்திலும் மற்றும் மறு சுழற்சி மையத்திலும் சேர்க்கப்படுகிறது. உலர்கழிவுகளில் பிரிக்க முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை திருவேற்காடு நகராட்சியிலிருந்து திருச்சி அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்ல போதுமான வாகனம் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தால் வாடகை மதிப்பீட்டில் தனியார் வாகனங்கள் மூலம் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்வதற்கான வாகனம் வாடகைக்கு அமைத்துக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.699**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.23

திருவேற்காடு நகராட்சியில் 1 முதல் 18 வார்டுகள் உள்ளன. இங்கு 31554 வீடுகளும், 116216 மக்கள் தொகையும் உள்ளது. இந்நகராட்சி சென்னை மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள பெரு நகராட்சியாகும். வரலாற்று சிறப்பு மிக்க இரு கோவில்களும் (ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோவில் மற்றும் வேதபுரீஸ்வரர் ஆலயம்) அமைந்துள்ளது. ஜுன், ஜுலை மாதம் முதல் தொடர்ந்து பெய்து வரும் பருவமழை மற்றும் பண்டிகை காலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொற்று நோய் பரவலை தடுக்கும் வகையில், மக்கள் கூடும் பொது இடங்கள், நெடுஞ்சாலை மற்றும் நகரின் உட்புற வீதிகளில் கிருமி நாசினி பொருட்கள் வேண்டி இருப்பதால், தற்போதைய இருப்பு போதுமான நிலையில் இல்லாததால் சுண்ணாம்பு, பிளிச்சீங் பவுடர், பினாயில் போன்ற கிருமி நாசினிகளை பொது சுகாதார நலன் கருதி அரசு நிர்ணயித்துள்ள விலையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி

பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

உத்தேச செலவினம் : ரூ.9.00 இலட்சம்.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.700**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.24

இந்நகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டு நிதியாண்டிற்கு சொத்து வரி பதிவேட்டில் கணினியில் கேட்பு தொகை இல்லாத (ZERO) 32 எண்ணிக்கை வரிவிதிப்புகள் உள்ளதை நீக்கம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 21.08.2024-ம் தேதியில் நடைபெற்ற காணொளி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் 1 முதல் 32 வரையிலான வரி விதிப்புகளை வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வர் மூலம் நேராய்வு செய்து நீக்கம் செய்ய சான்றொப்பம் வழங்கி உள்ளார்கள். எனவே, கீழ்காணும் பட்டியலில் உள்ள கேட்புத்தொகை இல்லாத வரி விதிப்புகளை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | வரி விதிப்பு எண் | கேட்பு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 015/001/901151 | 0.00 |
| 2 | 015/010/901654 | 0.00 |
| 3 | 015/012/901331 | 0.00 |
| 4 | 015/017/902040 | 0.00 |
| 5 | 015/007/902185 | 0.00 |
| 6 | 015/008/902392 | 0.00 |
| 7 | 015/010/901571 | 0.00 |
| 8 | 015/001/901061 | 0.00 |
| 9 | 015/001/901553 | 0.00 |
| 10 | 015/002/901557 | 0.00 |
| 11 | 015/002/901905 | 0.00 |
| 12 | 015/017/902066 | 0.00 |
| 13 | 015/017/902126 | 0.00 |
| 14 | 015/002/901885 | 0.00 |
| 15 | 015/007/902735 | 0.00 |
| 16 | 015/018/901827 | 0.00 |
| 17 | 015/005/901704 | 0.00 |
| 18 | 015/005/901750 | 0.00 |
| 19 | 015/008/902327 | 0.00 |
| 20 | 015/013/901517 | 0.00 |
| 21 | 015/017/902765 | 0.00 |
| 22 | 015/018/901687 | 0.00 |
| 23 | 015/001/901501 | 0.00 |
| 24 | 015/008/902606 | 0.00 |
| 25 | 015/010/901727 | 0.00 |
| 26 | 015/006/900847 | 0.00 |
| 27 | 015/004/901825 | 0.00 |

| | | |
|---|---|---|
| 28 | 015/006/900816 | 0.00 |
| 29 | 015/006/900844 | 0.00 |
| 30 | 015/007/902736 | 0.00 |
| 31 | 015/018/901590 | 0.00 |
| 32 | 015/018/901958 | 0.00 |

**ந.க.எண்.3857/2024/அ1**

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**தீர்மான எண்.701**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.25

---

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18313/2022 ஜே2, நாள் 09.03.2023ல் திருவேற்காடு நகராட்சியில், பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் திரு.சா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு.ஈ.அரி ஆகிய இரு வாகன ஓட்டுநர்கள், வாகன ஓட்டுநர் பணியில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி முடிந்து, தங்கப் பதக்கம் பெற தகுதியானவர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்டதன் அடிப்படையில், இவ்விரு ஓட்டுநர்களுக்கும் தங்கப் பதக்கம் தயாரிக்கவும், அதற்கான செலவினத்தை தெரிவிக்குமாறு சென்னை, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களை இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1158/2024 சி1 நாள். 23.07.2024ல் கோரப்பட்டது. சென்னை, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்தின் உதவி மேலாளர் (தயாரிப்பு) அளித்துள்ள 30.7.2024 நாளிட்ட ஒப்படைப்புப் பொருள் விவரப்பட்டியின் (Proforma Invoice) அடிப்படையில், திரு.சா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு.ஈ.அரி ஆகிய இரு வாகன ஓட்டுநர்களுக்கும் , இரு எண்ணிக்கையிலான தங்க பதக்கங்கள் தயாரிக்க ஆகும் செலவினம் ரூ.68,000/–ஐ தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த ஏதுவாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு ந.க.எண். 5776/2023 சி1 )

**அலுவலக குறிப்பு:–**

**நகர்மன்றம் அனுமதிக்கலாம்.**

---

**தீர்மான எண்.702**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.26

திருவேற்காடு நகராட்சியில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் படிவங்களான சொத்து வரி விதித்தல், காலிமனை வரி விதித்தல், கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்களின் கட்டணத்தை உயர்வு செய்யவும், மற்றும் வங்கியில் இருந்து திருப்பப்படும் காசோலைகள் தண்டத்தொகை ( PENALTY AMOUNT ) உயர்வு செய்யவும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**படிவங்கள் விவரங்கள் பின்வருமாறு:–**

| வ.எண் | விண்ணப்ப படிவ விவரம் | நிர்ணயிக்கப்பட்ட பழைய கட்டணம் ரூ. | நிர்ணயிக்கப்பட வேண்டிய புதிய கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பம் | 250.00 | 300.00 |
| 2. | சொத்துவரி படிவம் | 10.00 | 20.00 |
| 3. | காலிமனை வரி படிவம் | 10.00 | 20.00 |
| 4. | சொத்துவரி பெயர் மாற்றம் படிவம் | 10.00 | 20.00 |

| | | | |
|---|---|---|---|
| 5. | பிறப்பு / இறப்பு படிவம் | 10.00 | 20.00 |
| 6. | காசேலையானது 1.00 இலட்சத்திற்கு குறைவாக இருந்து காலாவதியானால் | 500.00 | 1000.00 |
| 7. | காசேலையானது 1.00 இலட்சத்திற்கு அதிகமாக இருந்து காலாவதியானால் | 1000.00 | 2000.00 |

**ந.க.எண்.** 1095/2024/A1

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.703**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

## பொருள் எண்.27

இந்நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வரிவிதிப்புதாரர்களுக்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் ஆகிய இனங்களை செலுத்தக்கோரி அனைத்து வரிதாரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அலைபேசி மூலமாக (BULK SMS) குறுஞ்செய்தி அனுப்பவும், மற்றும் அஞ்சல்துறை (POSTAL) மூலமாக கேட்பு அறிவிப்புகளை (DEMAND NOTICE) அனுப்பவும், அதற்கான தோராயச் செலவினத்தொகை ரூபாய் 2.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்** .1095/2017/A1

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.704**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

## பொருள் எண்.28

இந்நகராட்சி பொது பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வசூல் மையம் உள்ளிட்ட பிரிவுகளில் பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு தேவையான Toner, Ribbon, Mouse, Key Board, Pen drive, CD, A4paper, Legal paper, (Pen, Pencil, File pad, Wrapper Sheet, Office Covers, Gum) மற்றும் அலுவலக பயன்பாட்டு பொருட்கள் (Stapler, Ink pad, tag, Flop, File cover, etc...,) ஆகியவற்றை 2024-25-ம் நிதியாண்டிற்கு அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/- இலட்சத்திற்கு** நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.** 2719/2021/A1

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.705**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

## பொருள் எண்.29

இந்நகராட்சி பொது பிரிவு மற்றும் வருவாய் பிரிவிற்கு தேவையான கணினி ரசீதுகள், சொத்துவரி, தொழில்வரி, காலிமனை வரி, பெயர் மாற்றம், உள்ளிட்ட பணமதிப்புடைய படிவங்கள், வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்கப்படும் நோட்டீஸ் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை 2024-25-ம் நிதியாண்டிற்கு

அரசுஅங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் **ரூ.9.80/– இலட்சத்திற்கு** நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2719/2021/A1)

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**தீர்மான எண்.706**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

---

## பொருள் எண்.30

இந்நகராட்சி பொறியியல் பிரிவு , பொது சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளுக்கு தேவையான அளவுப்புத்தகங்கள். பணமதிப்புடைய குடிநீர் கட்டண விண்ணப்பங்கள், பிறப்பு , இறப்பு விண்ணப்பங்கள், கட்டிட உரிம விண்ணப்பங்கள் பிறப்பு, இறப்பு பதிவு படிவங்கள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகள் ஆகியவற்றை 2024–25–ம் நிதியாண்டிற்கு அரசுஅங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2719/2021/A1)

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**தீர்மான எண்.707**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

---

## பொருள் எண்.31

திருவேற்காடு நகராட்சி சென்னை பெரு மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள சிறப்பு நிலை நகராட்சியாகும். பாராளுமன்ற தேர்தல் அடுத்த கோடை காலத்தில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமற்றது என்பதால் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர், 02.07.2024 தேதிய மன்ற கூட்டத்தில் மன்ற பொருள் வைக்கப்பட்டு, விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோர உள்ள நிலையில் டெங்கு காய்ச்சல் அதிகரித்து வந்த சூழ்நிலையில் டெங்கு காய்ச்சலை பரப்பும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் மூலங்களை கண்டறிந்து பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்காலிகமாக 10 நபர்களை நியமித்து பணிகள் மேற்கொண்டு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு தினக்கூலி நிர்ணயித்துள்ளதன் அடிப்படையில் 15.07.2024 முதல் 13.08.2024 வரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண். 235(3) அட்டவணை II–3(g) ல் அனுமதி அளித்துள்ளதால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் படி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியினை துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் அலுவலக குறிப்பின்படி மேலும் 14.08.2024 முதல் 31.08.2024 வரை 18 நாட்களுக்கு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.90,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

---

தீர்மான எண்.708

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

பொருள் எண்.32

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட **நூம்பல்** கிராமம் , சர்வே எண்.80/1C, பழைய சர்வே எண்,49 Pt & 50 Pt –ல் 3907 ச.மீ இடத்தின் உரிமையாளர் **திரு.B.விக்ரம் குமார் பக்மர்** (GPA) அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கடிதம் எண்.**Layout–1/0268/2023, நாள்.10.01.2024**–ன் படி மேற்படி மனைப்பிரிவில் 21 மனைகள் கொண்ட மனைக்கு திட்ட அனுமதி எண்.15729, PPD/LO No.07/2024–ன் படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் 885 **ச.மீ சாலைகள்** மற்றும் (P.P–1) 16ச.மீ பொது உபயோகத்திற்காகவும் (P.P–2) 16ச.மீ மின்சார வாரியத்திற்காகவும் தானப்பத்திர பதிவு எண்.25363/2023, நாள்.29.12.2023 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் மனைபிரிவுக்கு சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மதிப்பீடுகள் தயாரித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு பணிகள் CMDA வரைபடத்தில் உள்ளவாறு நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று பொறியியல் பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரமைப்பு பிரிவு மனைப்பிரிவு கட்டணம் செலுத்திய பின்னர் மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:–</u>

சென்னை பெருநகர வளர்ச்சி குழுத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைபிரிவிற்கான அடிப்படை வசதிகள் இடத்தின் உரிமையாளர் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

---

தீர்மான எண்.709

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

பொருள் எண்.33

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1 | LKB நகரில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல். | 9.90 |

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2. | 3 | முருகன் நகர் 1வது, 3வது மற்றும் 4வது தெருக்களுக்கு மேல்மூடியுடன் கூடி ய மழைநீர் கால்வாய் அமைத்தல். | 9.70 |
| 3. | 6 | பாடசாலை தெருவில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல் மற்றும் TKM சாலை குறுக்கு தெருவில் சிமேண்ட் சாலை அமைத்தல் | 9.80 |
| 4. | 9 | எம்.ஜி.ஆர் நகர் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல். | 9.90 |
| 5. | 11 | வெங்கடேஸ்வரா நகர் மற்றம் அபிராமி நகர் பகுதிகளில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல். | 9.90 |
| 6. | 18 | நூம்பல் கண்ணபிரான் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல். | 9.60 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆ) மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

---

தீர்மான எண்.710

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.34

ந.க.எண். 003/2024/அ1, நாள்; 20.08.2024 நாளிட்ட பூவிருந்தவல்லி வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில் வடகிழக்கு பருவமழை 2024க்கான ஆயத்த கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பான ஆயத்த செயல் திட்ட பணிகள், பேரிடர் தணிப்பு மற்றும் மீட்பு திட்ட பணிகள் (Preparatory Action Plan for Disaster Mitigation and Rescue) குறித்து ஆய்வு கூட்டம் 21.08.2024 அன்று காலை 11.00 மணியளவில் பூவிருந்தவல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.21ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் சென்ற ஆண்டு தணிக்கையில் சுட்டிகாட்டப்பட்ட நமது நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பேரிடர் பொருள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. ஆலோசிக்கப்பட்டதன் அடிப்படையில் 21.08.2024 அன்று நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்திலும் வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. ஆகவே மேற்குறிப்பிட்ட ஆய்வுக்கூட்டங்களில் அறிவுறுத்தியதின் அடிப்படையில் பொதுசுகாதார பிரிவு துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் அலுவலக குறிப்பின்படி பொதுமக்கள் நலன் மற்றும் அவசர அவசியம் கருதி பின்வரும் பொருட்களான

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மண் வெட்டி | 25 |
| 2. | கடப்பாரை | 10 |
| 3. | பிக்காஸ் | 10 |
| 4. | கழிவு நீர் வடிகால் சுத்தம் செய்யும் கரண்டி (மூங்கில் பிடியுடன்) | 25 |
| 5. | அருவாள் | 20 |

| | | |
|---|---|---|
| 6. | முள்கரண்டி | 25 |
| 7. | ரோப் 20 மீட்டரில் | 2 |
| 8. | டார்ச் லைட் (மூன்று லைட் உள்ளது) | 10 |
| 9. | ஒளிரும் சட்டை | 150 |
| 10. | கவுன் | 10 |

வாங்கி இருப்பு வைத்து கொள்வதற்காக உள்ளூர் மற்றும் வெளியூர் ஒப்பந்த்தாரர்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கி பொருட்கள் வாங்குவதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.711**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.35

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் தற்போது அவ்வப்போது மழை மற்றும் காய்ச்சல்கள், தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் மாவட்ட பொது சுகாதார துறை, துணை இயக்குநர் அவர்களது ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு டெங்கு காய்ச்சல் பரப்பும் ஏடிஎஸ் கொசுப்புழு முதிர்வு கொசுக்களை ஒழிக்க மற்றும் ஈக்களை ஒழிக்க கீழ்க்கண்ட மருந்துகள் தேவைப்படுகிறது.

1. பைரித்திரியம்
2. பேசில்லா துரஞ்சஸ் (BT)
3. நோவான் அல்லது டும்டும்
4. Temipos 50 EC

அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து அரசு மருந்துகள் சேவை கழகம் நிர்ணயித்த விலையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

உத்தேச செலவினம் : ரூ.9.00

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.712**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.36

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு அவர்லேண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலம் நகரில் உருவாகும் கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக தாம்பிரித்து நுண் உன் செயலாக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மையத்தில் ஒப்படைக்கும் பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் சேகரிக்கப்படும் கழிவுகளில் பிரிக்க இயலாத கழிவுகளாக (Mixed Waste) சேகரித்து அவர்களது நிறுவனத்தின் மூலம் ஆப்பூர் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு வந்தது. தற்போது இந்நிறுவனத்தின் மூலம் மேற்கண்ட பணி நடைபெறாததால் பொது மக்களிடமிருந்து புகார்கள் வருகின்றது. ஆகவே, பொது சுகாதார நலன் கருதி பிரிக்காமல் வரும் மொத்த கழிவுகளை நகராட்சி மூலம் அதே பகுதிக்கு அனுப்பவும் அதற்கான வாகனம் JCB மற்றும் லாரிகளை வைத்துக்கொண்டு

தினந்தோறும் அனுப்பவும் அதற்கு ஆகும் செலவினத்தை சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் பட்டியலில் பிடித்தம் செய்து இப்பணியை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.291/2023/எச்1)

---

தீர்மான எண்.713

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.37

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக 1 முதல் 09 வரை வார்டுகளில் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு தேங்கும் மழைநீரை அகற்ற ஏதுவாக மின்மோட்டாருடன் கூடிய Pumpsets மற்றும் எரிபொருள் (Diesel) மூலம் உபயோகப்படுத்திடும் மோட்டார்கள் வாங்க வேண்டி உள்ளது. அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் மதிப்பீடு தொகை ரூ. 9.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

தீர்மான எண்.714

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.38

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக 10 முதல் 18 வரை வார்டுகளில் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு தேங்கும் மழைநீரை அகற்ற ஏதுவாக மின்மோட்டாருடன் கூடிய Pumpsets மற்றும் எரிபொருள் (Diesel) மூலம் உபயோகப்படுத்திடும் மோட்டார்கள் வாங்க வேண்டி உள்ளது. அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் மதிப்பீடு தொகை ரூ. 9.70 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மான எண்.715

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.39

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக 1 முதல் 9 வரை வார்டுகளில் நடவடிக்கையில் உள்ள அனைத்து முதன்மை (Primary Channels) கால்வாய்களையும் மற்றும் துணை கால்வாய்களையும் (Drain) தூர் (Silt) எடுத்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தேவைப்படும் Front end loader மற்றும் Chain Dozer (Hitachi) மற்றும் Silt எடுத்திடவும் தேவையான வாகனங்கள் கொண்டு

எடுக்கப்பட்ட Silt–னை அப்புறப்படுத்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் இயந்திர தளவாமங்கள், வாகனங்கள் மற்ற இனங்கள் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ள ரூ.9.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தொகை ரூ.9.70 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.716**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.40

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக 10 முதல் 18 வரை வார்டுகளில் நடவடிக்கையில் உள்ள அனைத்து முதன்மை (Primary Channels) கால்வாய்களையும் மற்றும் துணை கால்வாய்களையும் (Drain) தூர் (Silt) எடுத்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தேவைப்படும் Front end loader மற்றும் Chain Dozer (Hitachi) மற்றும் Silt எடுத்திடவும் தேவையான வாகனங்கள் கொண்டு எடுக்கப்பட்ட Silt–னை அப்புறப்படுத்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் இயந்திர தளவாமங்கள், வாகனங்கள் மற்ற இனங்கள் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ள ரூ.9.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தொகை ரூ.9.70 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.717**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.41

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழுங்கப்படும்" என்ற சட்டமன்ற அறிவிப்பின்படி இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிலையில் அரசு தலைமை செயலாளர் அவர்களின் கடிதம் எண்.1021/SP1/2022 நாள்.27.01.2023–ல் அனைத்து நகராட்சி பகுதிகளில் மேற்படி திட்டம் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்–1, நாள்.10.03.2023–ன்படி இந்நகராட்சியில் பகுதியில் கோலடி கிராமம் சர்வே எண்.63/5–ல் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற்கூட கட்டடம் அமைக்கப்பட்டு, மேற்கண்ட உணவு வழங்குபவரை தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.28.04.2022–ன்படி 26.05.2023 ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.No

Food Waste என்ற நிறுவனத்தாருக்கு இந்நகராட்சி செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.1160/2023/இ1, நாள்.26.05.2023–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட ஒப்பந்ததாரின் ஒப்பந்த காலம் 25.05.2024–வுடன் முடிவடைந்து, மேலும், முன்று மாதங்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி பணி மேற்கொள்ள நீட்டிப்பு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணிநீட்டிப்பு 3வழங்கப்பட்ட பணிக்காலம் 25.08.2024–வுடன் முடிவடைவதால், தற்போது மேற்கொண்டு வரும் M/s.No Food Waste என்ற நிறுவனத்தார் மூலமாகவே அதே விலைவிகிதத்தின் அடிப்படையில் மேலும், மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் அறிவுரையின்படி கோலடி பகுதியில் உள்ள ஒருங்கிணைப்பு உணவு தயாரிக்கும் ஒப்பந்ததாரருக்கு (Caterers Contractors) ஒப்பந்தகாலம் முடிவுற்ற பின்னர் முறையாக நீட்டிப்பு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு 25.08.2024 முதல் வழங்கிட அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும், மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.718**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.42

திருவேற்காடு நகராட்சி வார்டு எண். 8 பொன்னியம்மன் நகர் பகுதியில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) பின்புறம் உள்ள பகுதியில் Bio Methanation Plant கட்டமைப்பு கட்டப்பட உள்ளது. மேற்காணும் திட்டமானது சட்டமன்ற பேரவை 2024–2025 அறிவிப்பு பணியாகும். அவ்வறிப்பு பணியானது 15வது நிதி குழு மான்யம் (Tied Grant) திட்டம் 2024–2025–ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பகுதியில் Bio Methanation Plant அமைப்பதற்குண்டான இடம் சுமார் சராசரியாக 3.00 m ஆழம் உள்ளது. இப்பகுதி முழுவதும் மண் நிரப்பி அருகில் பாதுகாப்பு சுவர் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மண் நிரப்பி பாதுகாப்பு சுவர் அமைப்பதற்குண்டான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7.70 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**தீர்மான எண்.719**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.43

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 15வது நிதி குழு மான்யம் (Tied Grant) 2024–2025 மற்றும் 2023–24 ஆண்டின் கீழ் ரூ.170.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக பயோகேஸ் மையம் அமைக்க கீழ்க்கண்ட விபரப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.21293/2024/EA2. நாள்.22.07.2024–ன்படி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக

அனுமதி அளித்து உத்திரவு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு விபரம் | |
|---|---|---|---|---|
| | | | 15வது நிதி குழு மான்யம் 2024–2025 (Tied Grand) | 15வது நிதி குழு மான்யம் 2023–2024 (Tied Grand) |
| 1. | வார்டு எண்.7–ல் உள்ள பசுமை உரக்குடில் (MCC) அருகில் உயிரி எரிவாயு கலன் அமைத்தல். (Bio–Methanation Plant) | 170.00 | 107.29 | 62.71 |

**அலுவலக குறிப்பு :–**

பார்வையிட்டு அனுமதி அளிக்கலாம்.

---

**தீர்மான எண்.720**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.44

இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (Un–Tied Grant) 2021–2022 நிதியாண்டின் புதியதாக தெருவிளக்குகள் 1037 எண்ணிக்கை அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரர் M/s.SR United Infra Developers என்ற நிறுவனத்தாருக்கு 16.02.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. புதிய தெருமின் விளக்குகள் அமைத்திட தெருவிளக்குகளுக்கான மின்கம்பங்கள், மின்கடத்தி (Street Light Wire) மற்றும் இதர இனங்கள் மின்சார வாரியத்தால் அமைத்திடுதல் அவசியமாகிறது. இதற்கான பணிக்கு 15வது நிதிக்குழு நிதியில் ரூ.10.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காக இந்நகராட்சியில் இருந்து சுமார் 81 எண்ணிக்கை விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக பதியப்பட்டு பதிவு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி விண்ணப்பங்களுக்கான பதிவு கட்டணம் மற்றும் மதிப்பீடு கட்டணம் செலுத்திட மின்சார வாரியத்தால் கேட்பு பெறப்பட்டு இதுநாள் வரை சுமார் ரூ.63.29/– இலட்சம் நகராட்சியால் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், சில இடங்களில் தெருவிளக்குகளுக்கான மின்கடத்தி அமைக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே, இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கண்ட செலவினம் மேற்கொள்ள முதல் கட்டமாக ரூ.90.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இனி வரும் காலங்களில் மின்சார வாரியத்திலிருந்து மேற்படி பணிக்காக பதிவு கட்டணம், மதிப்பீடு கட்டணம் பெறப்படின், தொகை செலுத்தவும் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.721** **தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.45

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23–ம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி

பணியினை மேற்கொள்ள 01.02.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எம்.கார்த்திக் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, 25 % பணிகள் மட்டுமே முடிவடைந்த நிலையில், மீதமுள்ள பணிகளையும் விரைந்து முடிக்க மூன்று அறிவிப்புகள் வழங்கப்பட்டது. அறிவிப்புகள் வழங்கியும் பணிகளை முடிக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால், இவ்வலுவலக செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.1288/2022/இ1,. நாள்.25.06.2024–ல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி 19.07.2024 தேதியன்று பெறும் வகையில் கோரப்பட்டது. மேலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1–ல் சுந்தரசோழபுரம் கிராமம் சர்வே எண்.21/4–ல் உள்ள தாழங்குளத்தில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 18.785 | 1. M/s.Vanaja Construction<br>2. G.Vijayakumar | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>4.12 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :–

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் பணி உத்திரவு வழங்கியமைக்கும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.722**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

பொருள் எண்.**46**

திருவேற்காடு நகராட்சியில் நகர்மன்ற தீர்மான எண் 491, நாள்: 29/09/2023 ன் படி அளிக்கப்பட்டுள்ள ஒப்புதலின்படி டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள ரைட்கேர் சர்வீசஸ் என்ற மகளிர் சுய உதவி குழுவிற்கு 25 DBC பணியாளர்களும், வடநூம்பல் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு என்ற மகளிர் சுய உதவி குழுவிற்கு 30 DBC பணியாளர்களும், அமலேஸ்வரி அசோசியேட்ஸ் என்ற மகளிர் சுய உதவி குழுவிற்கு 30 DBC பணியாளர்களும் மற்றும் இராணி அண்ணா நகர் பகுதி அளவிலான மகளிர் சுய உதவி குழுவிற்கு 20 DBC பணியாளர்கள் என ஆக மொத்தம் 105 DBC பணியாளர்களைக் கொண்டு 4 குழுக்களாக பிரித்து நகராட்சி முழுவதும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள 03.10.2023 முதல் பணி உத்தரவு வழங்கப்பட்டு மற்றும் அவ்வப்போது பணி நீட்டிப்பு செய்தும் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் கடந்த 2024 மார்ச் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் முன்னிட்டு 30.04.2024 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. அதன் பிறகு கோடை காலம் என்பதாலும் காய்ச்சலின் தாக்கம் குறைவாக இருந்த காரணத்தினாலும் தற்காலிகமாக டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மேற்கொள்ளவும் பணி நிறுத்தி வைக்கப்பட்டு அவசர அவசியம் கருதி 10 DBC பணியாளர்கள் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது , தொடர்ந்து மழை பெய்து வருவதால், கடந்த மே மாதம் முதல் நாளது தேதி வரை 38 நபர்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு உள்ளது. மேலும், கடந்த 13.08.2024 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில் திருவேற்காடு நகராட்சியில் அதிகமான அளவில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதால், அதனை கட்டுப்படுத்தும் விதமாக உடனடியாக அனுமதிக்கப்பட்ட 105 DBC பணியாளர்களை நியமனம் செய்து உரிய நோய் தடுப்பு நடவடிக்கைக்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். இந்நிலையில் மன்ற தீர்மான எண்கள் : 635, 636, 637, 638, 639 நாள்: 02.07.204–ல் டெங்கு பணிகள் மேற்கொள்ள 105 பணியாளர்களை கொண்டு 5 குழுக்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 105 DBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு 14.08.2024 அன்று அனுப்பி வைக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து நிர்வாக ஒப்புதல் பெறுவதில் கால தாமதம் ஏற்பட்டு வருவதால் டெங்கு காய்ச்சல் அதிகமான அளவில் பரவி வருவதால், அவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு ஏற்கனவே, மன்ற தீர்மான எண்:635, 636, 637, 638, 639 நாள்:02.07.2024–ல் பெறப்பட்ட 105 DBC பணியாளர்களை கொண்டு 5 குழுக்களுக்கு பதிலாக ஏற்கனவே, DBC பணி மேற்கொண்டு வந்த அதே 4 குழுக்கள் மூலம் அதே விலை விகிதத்தில் டெங்கு பணி 01.09.2024 முதல் 3 மாத காலத்திற்கு பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ50.00 இலட்சம் வருவாய் அல்லது திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ஆகிய நிதிகள் மூலம் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை கட்டணம் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.723**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது.

---

*ஒம்/–.* **E.** கிருஷ்ணமூர்த்தி

நகர்மன்றத் தலைவர்,
திருவேற்காடு

/உண்மை நகல்/

ஆணையர்,

திருவேற்காடு நகராட்சி.

திருவேற்காடு நகராட்சி

அவசரக் கூட்டம்

திருவேற்காடு நகராட்சியில் **2024–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான நகல்.**

**பொருள் எண்.1**

திருவேற்காடு நகராட்சியில் SUIDF 2022–2023 திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக 5734 எண்ணிக்கையிலான மாற்றம் செய்ய உரிய அனுமதிகள் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 1037 எண்ணிக்கையிலான புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்க உரிய அனுமதிகள் பெற்று, தெருமின்விளக்குகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பணிமுடிவுறும் தருவாயில் உள்ளது. இந்நிலையில், தெருமின் விளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றுவதற்கு உரிய கணக்கெடுப்பு பணிகள் முடிவுற்று சுமார் 2 வருடம் ஆன நிலையில் புதியதாக உருவான குடியிருப்பு பகுதிகளிலும், புதிய பகுதி குடியிருப்பு செல்லும் வழிகளிலும் தெருவிளக்குகள் தொடர்புள்ள மனைதாரர்கள் அமைக்கப்பட்டுள்ளது, புதிய LED விளக்குகள் இதுபோன்ற பல இடங்களில் இடைப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாகவும் மாற்ற வேண்டியுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தற்பொழுது மேற்படி இடங்களில் LED விளக்குகள் மாற்றம் செய்யாமல் உள்ளதால் மிகுந்த இருள் கொண்ட பகுதியாக உள்ளதாலும்,,பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமங்களை ஏற்படுத்துவதாலும், பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளது. மேற்படி விளக்குகளை புதிய LED விளக்குகளாக மாற்றம் செய்ய பொது மக்கள் கோரி வருவதாலும் எதிர்நோக்கும் வடகிழக்கு பருவமழையினால் மேற்படி பகுதிகள் இருள் காரணமாக பாதிப்படையும் என எதிர்நோக்குவதாலும் மேலே தெரிவிக்கப்பட்ட பகுதிகளில் புதிய LED விளக்குகள் புதியதாக பொருத்த வேண்டியுள்ளது. அதற்கான முதல் கட்டமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

---

தீர்மான எண்.724

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

**பொருள் எண்.2**

திருவேற்காடு நகராட்சியில் SUIDF 2022–2023 திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக 5734

எண்ணிக்கையிலான மாற்றம் செய்ய உரிய அனுமதிகள் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 1037 எண்ணிக்கையிலான புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்க உரிய அனுமதிகள் பெற்று, தெருமின்விளக்குகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பணிமுடிவுறும் தருவாயில் உள்ளது. தற்பொழுது LED தெருவிளக்குகள் அமைக்க கணக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் பல இடங்களில் இந்நகராட்சி சென்னைக்கு அருகாமையில் உள்ளதால், குடியிருப்புகள் புதியதாக உருவாகியுள்ளது மற்றும் பல இடங்களில் குடியிருப்புகள் விரிவடைந்துள்ளது. இதன் காரணமாக மனைகள் (Layout) அமைப்பவரால் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை யாவும் பெரும்பாலும் CFL, SVL மற்றும் குழல் விளக்குகளாகவே உள்ளது. மேற்படி விளக்குகளை பொது மக்கள் நலன் கருதி பராமரிக்க வேண்டியுள்ளது. பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பொருட்கள் வாங்க வேண்டியுள்ளதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும், மதிப்பீட்டு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

தெருவிளக்குகள் பழுதினால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

---

**தீர்மான எண்.725**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

பொருள் எண்.3

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட **நூம்பல்** கிராமம், சர்வே எண்.80/1E1, 1E2 & 1E3 (Old S.Nos.49Pt & 50Pt) –ல் 6838 ச.மீ இடத்தின் உரிமையாளர் M/s.Royal Land & Developers Pvt.Ltd Rep by Thiru.Vikram Kumar Bagmar & 2 others அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கடிதம் எண்.Layout–1/0039/2024, நாள்.04.07.2024–ன் படி மேற்படி மனைப்பிரிவில் 39 மனைகள் கொண்ட மனைக்கு திட்ட அனுமதி எண்.15858, PPD/LO.No.141/2024–ன் படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் 1693 **ச.மீ சாலைகள்** மற்றும் (P.P–1) 26ச.மீ பொது உபயோகத்திற்காகவும் (P.P–2) 26ச.மீ மின்சார வாரியத்திற்காகவும் தானப்பத்திர பதிவு எண்.10546/2023, நாள்.24.06.2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் மனைபிரிவுக்கு சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மதிப்பீடுகள் தயாரித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு பணிகள் CMDA வரைபடத்தில் உள்ளவாறு நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று

பொறியியல் பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரமைப்பு பிரிவு மனைப்பிரிவு கட்டணம் செலுத்திய பின்னர் மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:–</u>**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைபிரிவிற்கான அடிப்படை வசதிகள் இடத்தின் உரிமையாளர் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.726**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

*ஓம்/–*. **E. கிருஷ்ணமூர்த்தி**

**நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு**

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**திருவேற்காடு நகராட்சி.**